ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT

මගේ අංකය / எனது இல. / My No. 7/2/3/5/10/EB – 2018/G-II/ST-2 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 01.08.2018

**மிக அவசரம்**

மாவட்டத்திற்குப் பொறுப்பான
சகல பிரதி/உதவி ஆணையாளர்களுக்கு,

**<u>கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ம் வகுப்பு உத்தியோகத்தர்களின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2018.</u>**

01.03.2013 ஆந் திகதியில் திருத்தம் செய்யப்பட்ட 01.01.2013 ஆந் திகதியில் அனுமதிக்கப்பட்ட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியின் பொருட்டான ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் II ஆம் வகுப்பிற்கு உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் பொருட்டான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை தடைப்பரீட்சை 2018 செப்ரெம்பர் மாதம் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கமநல உத்தியோகத்தர்களிடமிருந்து 20.08.2018 ஆந் திகதி வரையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கமைய விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி 20.08.2018 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கும் வண்ணம் பிரதி/உதவி ஆணையாளரின் ஊடாக பதிவுத் தபாலில் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

02. பழைய ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் புதிய ஆட்சேர்ப்பு நடைமுறையில் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைக்குரிய பாட விதானங்கள் சமமானது என்பதால் இதற்கு முன்னர் பரீட்சையின் பொருட்டு தோற்றி, பரீட்சையில் சித்தியடையாத, ஒரு பாடம் மட்டும் சித்தியடைந்த உத்தியோகத்தர்களுக்கும் இப்பரீட்சையின் பொருட்டு தோற்ற முடியும்.

03. இப் பரீட்சையின் பொருட்டு முதற் தடவையாகத் தோற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது என்பதுடன், இரண்டாவது தடவையாகவும் அல்லது அதற்கு கூடிய தடவைகளில் தோற்றும் உத்தியோகத்தர்கள் ஒரு பாடத்திற்கு ரூபா 75/- வீதம் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். இதற்கு முன்னர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சையின் பொருட்டு விண்ணபித்து, பரீட்சையின் பொருட்டு தோற்றாத உத்தியோகத்தர்களும் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தின் பொருட்டு விண்ணப்பதாரர்கள் உரிய மாவட்ட அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு 20.08.2018 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பணம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பொது 172 பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுதல் வேண்டும்.

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව, අංක 42, ශ්‍රීමත් මාර්කස් ප්‍රනාන්දු මාවත, තැ.පෙ. 537, කොළඹ 07.
கமநல அபிவிருத்தித் திணைக்களம், இல. 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, அ.பெ. 537, கொழும்பு 07.
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT, No. 42, SIR MARCUS FERNANDO MAWATHA, P. O. BOX. 537, COLOMBO 07.
දුරකථන/தொலைபேசி/Telephones :

පොදු කාර්යාලය / பொது அலுவலகம் / General Office: 2694231, 2694232, 2694233, 2694234
ගොවිජන සංවර්ධන කොමසාරිස් ජනරාල් / கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் / Commissioner General of Agrarian Development: 2691060
ෆැක්ස් / தொலை நகல் / Fax: 2693572, 2691843, 2674481
E-mail : commissionerdad@yahoo.com
විදුලි පණිවුඩ / தந்தி / Telegram: ගොවිජනසේවා / கொவிசேவா / Agraservis

04. இப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இரு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

- I வது வினாத்தாள் - கணக்கு வைத்தல் மற்றும் நிதிப்பிரமாணம் (காலம் 03 மணித்தியாலங்கள்)
- II வது வினாத்தாள் - தாபன நடவடிக்கைகள் மற்றும் பிரமாணங்கள்(காலம் 02 மணித்தியாலங்கள்)

(மேற்படி இரு வினாப்பத்திரங்களுக்கும் உரிய பாட விதானத்தின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

05. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதற்ற, பூரணமற்ற மற்றும் உரிய திகதியின் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இல்லாது நிராகரிக்கப்படும் என்பதால், சகல தகவல்களும் உட்படுத்தப்பட்டு, விண்ணப்பப்படிவம் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாகவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு, அதன் விபரங்கள் விண்ணப்பப்படிவத்தில் உட்படுத்தப்பட்டுள்ளதா என்பது பற்றியும் அவதானத்தில் கொள்ளல் வேண்டும்.

06. விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் சகல பரீட்சாத்திகளுக்கும் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சாத்திகளினால், பரீட்சை நிலைய அதிகாரியிடம் தனது பரீட்சைக்கான அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறான அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் ஒரு உத்தியோகத்தருக்கு பரீட்சை நடைபெறுவதற்கு 07 நாட்களுக்கு முன்னர், அனுமதி அட்டை கிடைக்காதுவிடின், அது தொடர்பாக தாமதமின்றி எனக்குத் தெரியப்படுத்தி அனுமதி அட்டையொன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

07. இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள பாடவிதானம் மற்றும் மாதிரி விண்ணப்படிவம் என்பனவற்றை உரிய சகல உத்தியோகத்தர்களிதும் அறிதற்பொருட்டு தாமதமின்றி சமர்ப்பிக்கும்படி அறியத் தருகின்றேன்.

ஒப்பம்: யூ.பீ. ரோஹண ராஜபக்ஷ,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் (மனித வள அபிவிருத்தி),
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்காக.

மாதிரி விண்ணப்பப்படிவம் பரீட்சை சுட்டெண் [ ]

(அலுவலக பாவனைக்காக மட்டும்)

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் II ம் வகுப்பு உத்தியோகத்தர்களின்

விளைத்திறன்காண் தடைப்பரீட்சை.

(கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை) - 2018

01. i. முதலெழுத்துக்களுடன் பெயர்:- ..........................................

ii முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:- ..........................................

02. பால்:- ஆண் / பெண்:- ..........................................

03. கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II வகுப்பிற்கு நியமிக்கப்பட்ட திகதி:- ..........................................
(நியமனக் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியை இணைத்து அனுப்பவும்.)

04. i. தற்போது சேவையாற்றும் நிலையம்:- ..........................................

ii பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி:- ..........................................
..........................................

iii. கையடக்கத் தொலைபேசி இலக்கம்:- ..........................................

05. i தாங்கள் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மொழி:- ..........................................

ii தாங்கள் பரீட்சைக்கு தோற்றும் மொழி:- ..........................................

06. i. இம் முறை தாங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா என்பது பற்றி:- ..........................................

ii. தாங்கள் முன்னர் பரீட்சைக்குத் தோற்றி ஒரு பாடம் சித்தியெய்திருப்பின் பின்வரும் விபரங்களைத் தருக.

அ. சித்தியடைந்த பாடம்:- ..........................................

ஆ. பரீட்சை நடாத்தப்பட்ட வருடம்:- ..........................................

07. இத்தடவை தாங்கள் பரீட்சைக்குத் தோற்ற எண்ணியுள்ள பாடங்கள்:-

அ. ..........................................

ஆ. ..........................................

08. **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

நான் இப் பரீட்சையில் இரு பாடங்களுக்கும் /ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதனால், ரூபா. ......... பெறுமதியான .................. இலக்கமுடைய ..................... திகதிய பொது 172 பற்றுச்சீட்டு இத்துடன் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நான் பரீட்சைக்குத் தோற்றியுள்ளேன்/தோற்றவில்லை. (தேவையற்ற வசனங்களை வெட்டி விடவும்). இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ......................

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்.**

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் II ஆம் வகுப்பின் திரு/திருமதி/செல்வி .......................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் ...... ...... 2018 ஆந் திகதி எனது முன்னிலையில் ................................. யில் இவ்விண்ணப்பப்படிவத்தில் கைச்சாத்திட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்: ......................
பெயர்:- ..........................................
பதவி:- ..........................................
முகவரி:-

- பிரதி/உதவி ஆணையாளரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு,உத்தியோகபூர்வ முத்திரையை இடல் வேண்டும்.
- முதலாவது தடவையாக தோற்றும் உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது என்பதுடன், ஒரு பாடத்தின் பொருட்டு ரூபா 75/- வீதம் பரீட்சைக் கட்டணம் உரிய மாவட்ட அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு 20.08.2018 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுதல் வேண்டும்.
- 20.08.2018 ஆந் திகதி வரையில் மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படும்.